# வவுனியா நகர முஹைதீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல்


## திறப்பு விழா

# சிறப்பு மலர் - 2008



M. segu Rajeethu
0770245671

வவுனியா முஹைறதீன் ஜும்ஆ
பெரியபள்ளிவாசல் என்றென்றும்
சிறப்புடன் சீர்பெற்று
தீன் ஓங்க வாழ்த்துகின்றேன்.



**P.S.ABDULLAH & son**
**Petroleum corporation,**
**shell Gas lanka LTD**
**ceylon oxyGen, LTD, ceylon**
**Grain Elevators LTD**

Tharmalingam Road,
Vavuniya.

வவுனியா நகர முஹைதீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல்

# திறப்பு விழா

## சிறப்பு மலர் :- 2008.03.28

தலைமை

அல்ஹாஜ் P.S.அப்துல்லா J.P

(தாஜுல் உம்ஆ)

மலர் ஒழுங்கமைப்பாளரும், மலர் ஆசிரியரும்
அல்ஹாஜ் M.K.ஆரீப் J.P

மலர் வெளியீட்டு ஆய்வு
அல்ஹாஜ் மௌலவி,
S. *அப்துல் சமட்* BA. Dip. in Edu. M.Ed

பதிப்பு :- 2008 February

வெளியீடு :- 2008.March.28

மலர் வெளியீட்டு அங்கீகாரம்
வவுனியா நகர முஹைதீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நிர்வாகம் - வவுனியா.

பஸார்வீதி, வவுனியா.
தொ.பே. இல :- 024 2223100

M. Segu Rajeethu

J/OSMANIYA KALLOORY



பள்ளிவாசலின் இருபக்கத்தின் இப்போதைய அழகிய தோற்றம்

# நுழைவதற்கு முன் உங்களுடன்.....

உலகத்தில் இறைவனுக்கு மிக விருப்பமான இடமென்றால் இறையில்லமே! அதேபோல் ஓறிறைக்கட்டளையை ஏற்று நடக்கும் முஸ்லிம்களாகிய நாம் நேசிக்கும் உயரிய இடமும், அதுவே.

அவ்வகையில் வவுனியா நகரத்தில் அழகுறக் காட்சி தரும் இம்மாபெரும் இறையில்லத்தின் வளர்ச்சிப்படிகள் பற்றிய வரலாற்றுச் செய்திகளை இச்சிறப்பு மலரூடாக எமது சமூகத்துடன் பகிர்ந்து கொள்வது சாலச் சிறந்தது என எண்ணியதற்கமைய நான் எமது பள்ளிவாசல் நிருவாகத்திடம் இக்கருத்தை முன்வைத்த போது அனைவரும் ஒன்றிணைந்து இம்மலர் வெளியீட்டுக்கு அங்கீகாரம் அளித்ததுடன் இப்பாரிய பணியை நிறைவேற்றும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்ததையிட்டு இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

எனவே இம்மலரிலே என்னுடைய அறிவாற்றலுக்கு எட்டியவாறு முடிந்தளவு பல புத்திஜீவிகள், அனுபவசாலிகளுடன், ஆலோசனைகளையும் செய்து இம்மலரைப் பூரணப்படுத்தியுள்ளேன். இம்மலர் வெளியீட்டுக்கான பிரதான நோக்கம் இப்பள்ளிவாசலின் சிறப்பம்சங்களையும் இதன் வளர்ச்சிக்கு உழைத்த முன்னோர்களையும், இப்பள்ளிவாசலைக் கண்ணிப்படுத்துகின்ற இம்மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் கிராமப்பள்ளிவாசல்களின் வாழ்த்துச் செய்திகளையும், அதனுடன் எமது மாவட்ட முஸ்லிம் கிராமங்களின் முக்கிய தகவல்களையும் பள்ளிவாசல்களின் தோற்றங்களையும் (புகைப்படங்கள்) உள்ளடக்கியிருப்பது முக்கிய அம்சமாகும்.

அத்துடன் இப்பள்ளிவாசலின் வக்பு சொத்துக்கள், மற்றும் நிர்வாக பராமரிப்பு நடைமுறைகள் பற்றிய விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன், இம்மலருக்கு இன, மத, கட்சி வேறுபாடுகளுக்கப்பால், மதத்தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், மற்றும் புத்திஜீவிகள் அனைவரும் வாழ்த்துக்களையும், கவிதைகளையும் வழங்கி மேலும் சிறப்படையச் செய்துள்ளனர்.

இவையனைத்திற்கும் மேலாக இப்பள்ளிவாசல் தொடர்பாக அனைவரின் ஒத்துழைப்புடன் வெளியிடப்படும் முதலாவது இச்சிறப்புமலர் என்பதால் இப்பள்ளிவாசலை நேசிக்கும் அனைவரினதும் கரங்களில் இருக்க வேண்டிய வரலாற்று மலராகும். இறுதியாக இத்துறையில் என்னுடைய கண்ணி இம்முயற்சியாகையால் தவறேதும் இருப்பின் இறைவனுக்காக மன்னித்து நிறைவுகாணுமாறு வேண்டி விடைபெறுகின்றேன்.

இப்படிக்கு,

அல்ஹாஜ் M.K. ஆரீப் J.P

மலராசிரியரும்

சமூகசேவையாளரும்.

## பள்ளிவாசல்
## தலைவரின் வாழ்த்துரை...

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம் சொல்லால், செயலால், வல்லோன் நாயனைப் புகழ்ந்து ஏந்தல் நபிமீதும் ஏற்றல் மிகு தோழர்கள் மீதும் உவகையுடன் ஸலவாத்தும் ஸலாமும் கூறிய பின் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே அல்ஹம்துலில்லாஹ் இச்சிறப்பு மலருக்கு எனது எண்ணக்கருக்களை வார்த்தைகளாக்குவதையிட்டு ஆனந்தமடைகின்றேன். அல்ஹம்துலில்லாஹ்

இப்பகுதி வாழ் மக்களின் நன்மையும் தேவையும் கருதி 1925ம் ஆண்டு நிர்மானிக்கப்பட்ட இப்பள்ளிவாசல் அவ்வப்போது பல தடைகளைக் கடந்து வசதிகள் பல பெற்று இன்று கம்பீரமாக எழில் மிகு தோற்றத்தில் எம் கண் முன்னே தலை நிமிர்ந்து நிற்கிறது.

இத்தனை அழகு மிக்க எழில்மிகு கம்பீரமான உன் ஆலயமாகிய புனித மஸ்ஜிதை நாங்கள் எம், மண்ணில் பார்த்து பரவசமடைகிறோம். இது உனது பலஹீனமான அடியார்களால் எப்படி சாத்தியமானது? என வியக்கவும் வைக்கிறது. எல்லாம் உன் அருளேயன்றி வேறில்லை.

இதையெல்லாம் எண்ணி எங்கள் ஆண்மாக்கள் குளிர்கிறது. இன்பம் பெருக்கெடுக்கிறது. இப்பொன்னான பள்ளித்திறப்பு விழாக்காட்சி எங்களின் மனக் கண்களில் விரிகிறது. உயர்ந்து நிற்கும் இம்மினாராக்கள் போன்று நாங்கள் உன் தீனுக்காக தலை நிமிர்ந்து நின்று உன்னையன்றி வேறு எவர்க்கும் எதற்கும் அஞ்சாத நெஞ்சுறுதி மிக்கவர்களாகத் திகழ அருள் புரிவாயாக!

இப்பொன்னான நற்செயலுக்காக அறம் செய்து அள்ளிக்கொடுத்து இப்பள்ளியின் நிர்மானப் பணிகளில் பங்கெடுத்துக் கொண்டோர்களே தங்களின் மேலான துஆக்களில் இத்திருப்பணி சீரும் சிறப்புபமாக நடந்தேற இறைவனை இறைஞ்சினார்களே மற்றும் நல்ல ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கினார்களே அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் எல்லோரையும் வல்லவன் அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக.

1964ம் ஆண்டு தொடக்கம் இன்று வரைக்கும் இந்த அல்லாஹ்வின் மாளிகைக்கு தலைவராக என் சக்திக்கு ஏற்ப செயல்பட்டுக் கொண்டிருப்பதை இட்டு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

1962ம் ஆண்டு கௌரவ அமைச்சர் அல்ஹாஜ் எம்.எச்.மொஹமட் அவர்கள் இப்பள்ளிக்கு விஜயம் செய்யும் போது அரபிக் பாடசாலைக்கட்டிடத்திற்கு கல் நாட்டப்பட்டு அவருடைய முயற்சியின்

காரணமாக அரசாங்கத்திடம் இருந்து 18 பேர்ச் காணியும், பெற்றுத்தந்தார். வேருவளை, கொழும்பு, முஸ்லீம் வர்த்தக சகோதரர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற நன்கொடைப் பணத்தில் அரபிக் பாடசாலை கட்டி முடிக்கப்பட்டது. அத்துடன் முன்னால் முஸ்லீம் கலாச்சார அமைச்சராக இருந்த ஏ.எச்.எம்.அஸ்வர் ஹாஜியார் அவர்களும் பண உதவியும் ஆலோசனைகளும் வழங்கியுள்ளார். அதேபோன்று இன்னும் பல வகைகளிலும் உதவி புரிந்த அமைச்சர் பௌசி ஹாஜியார் அவர்களும், அமைச்சர் றிஷாட் பதீயுதீன் ஹாஜியார் அவர்களுக்கும் எமது மாவட்ட முன்னால் அமைச்சர்களான நூர்தீன் மஷுர் ஹாஜியார் S.S.M.அபூபக்கர் ஹாஜியார் அனைவரையும் இந்த நேரத்தில் நினைவு கூறி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1965 - 1972 - 1975ம் ஆண்டுகாலப் பகுதியில் அரபிக் பாடசாலையும் பள்ளிவாசலையும் பராமரிப்பதற்காக பள்ளியைச் சுற்றி இருக்கும் காணியில் கடைகள் அமைக்கப்பட்டு தற்போது அதன் மூலம் நல்ல வருமானமும் வந்து கொண்டிருக்கிறது. அந்தக் காலப் பகுதியில் இவைகளுக்கெல்லாம் என்னுடன் சேர்ந்து முயற்சி எடுத்த அப்துல்லத்தீப் ஹாஜியார் மர்ஹூம் அல்ஹாஜ் A.C.M.சஹாப்தீன்J.P, செயினுலாப்தீன் ஹாஜியார், மீராஹாகிபு ஹாஜியார் ஆகியோர்களின் சேவைகளையும் இந்நாளில் நினைவு கூறிக்கொள்கின்றேன்.

இப்பள்ளிவாசல் வரலாற்றில் இன்றைய தினம் ஒரு பொன்னான வரலாறு கூறும் மகத்தான தினமாகும். இம்மகத்தான நற்செயலுக்காக பொருளாலும், உடலாலும், ஆலோசனைகளினாலும் மற்றும் பல்வேறு வகையாலும் பங்களிப்புச் செய்த அத்தனை நல்லுள்ளங்களுக்கும் நன்றி கூறி இறைவன் நல்லருள் நல்ஹ வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

*வஸ்ஸலாம்*

அன்புடன்
அல்ஹாஜ் P.S.அப்துல்லா J.P
தலைவர்
நகரப்பள்ளிவாசல் - வவுனியா.

# கௌரவ றிஷாட் அமைச்சரின் வாழ்த்துச்செய்தி

வவுனியா நகர் முஹைதீன் ஜும்ஆப் பள்ளிவாசல் கட்டிடத் திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே! சாந்தியும் சமாதானமும் எம்பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் தோழர்கள் அனைவர்கள் மீதும் உண்டாகட்டும்.

மண்ணில் இருந்து மனிதனைப் படைத்த இறைவன் மனித வாழ்வு சிறப்புப் பெறவேண்டும் என்பதற்காக புனித இஸ்லாத்தை வழங்கி பரிசாகத் தொழுகையை வழங்கினான்.

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றுதான் தொழுகை. தொழுகை என்பது மனிதனின் ஆத்மாவையும் சரீரத்தையும் பரிசுத்தப்படுத்தி அவனை அல்லாஹ்வின் பால் இணைக்கின்ற ஒரு பெரும் அருட் கொடையாகும்.

இந்தத் தொழுகையின் பின் பரிசுத்தமான உள்ளங்களோடு பிரபஞ்சம் மற்றும் அதன் படைப்பாளன் அல்லாஹ்தஆதலாவைப் பற்றி பல உண்மைகளைத் தெரிந்து கொள்ள அமர்ந்திருக்கும் சஹாபாக்களிடம் எம்பெருமான் நபி (ஸல்) அவர்கள் பிரசங்கம் செய்வார்கள்.

இந்தப் பிரசங்கமானது இஸ்லாத்தின் வேர்களை அவர்களின் மனதில் பதியச் செய்து மறுமை பற்றி நம்பிக்கையை உறுதிப்படுத்தும் உரையாக இருக்கும் அச்சமயத்தில் மஜ்லிஸில் கூடியிருக்கும் சஹாபாக்கள் தேம்பித் தேம்பி அழத் தொடங்குவார்கள். இப்படிப்பட்ட நிகழ்வுகளின் தளமாகவே மஸ்ஜிதுகள் இருந்தன.

அந்த வகையில் பள்ளிவாசல்கள் தொழுகைக்காக மட்டுமன்றி அறிஞர்களையும், உலமாக்களையும் உருவாக்குகின்ற கலாபீடமாகவும் திகழ்ந்துள்ளன. அது மாத்திரமன்றி சன்மார்க்க சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நீதிமன்றமாகவும் செயற்பட்டு வந்துள்ளன.

உஸ்மான் (ரலி) அவர்களின் ஆட்சிகாலத்தில் மஸ்ஜிதுன் நபவியை விரிவுபடுத்திய போது நீங்கள் மிகவும் விரிவுபடுத்திவிட்டீர்கள் என்று மக்கள் அவர்களிடம் ஆட்சேபனை செய்தார்கள். அதற்கு அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி எவர் பள்ளிவாசல் ஒன்றைக் கட்டுகின்றாரோ அல்லாஹ் அவருக்காக சுவர்க்கத்தில் ஒரு மாளிகையைக் கட்டுகின்றான் என்று நபி (ஸல்) அவர்கள் கூற நான் செவியுற்றுள்ளேன் என உஸ்மான் (றலி) கூறினார்கள்.

மூவின மக்களும் ஐக்கியத்துடன் சேர்ந்து வாழும் வட புலத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள வவுனியா மாநகரில் புனர்நிர்மானம் செய்யப்பட்டு அழகுறக் காட்சி தரும் முஹைதீன் ஜும்ஆ மஸ்ஜித் திறப்பு விழா நிகழ்வு சிறப்புற அமைய இறைவனை இறைஞ்சுகின்றேன்.

இதே நேரம் இப்பள்ளியை நீண்டகாலமாக சிறப்புற நிர்வகித்து வரும் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்களையும் உலமாக்களையும் ஊர் ஜமா அத்தினர்களையும் கௌரவத்துடன் பாராட்டுகின்றேன்.

வவுனியா முஹைதீன் ஜும்ஆ மஸ்ஜித் இஸ்லாமிய எழுச்சியின் சின்னமாகத் திகழ எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலாவிடம் நான் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

அல்ஹாஜ் றிஷாட் பதியுதீன் (பா.உ)

மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த

நிவாரண சேவைகள் அமைச்சர்

# கௌரவ நூர்தீன் மசூர் அவர்களின் வாழ்த்துச்செய்தி

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கின்றேன்!

வடபுலத்தின் முதற்கல்லான வன்னி மண்ணின் வவுனியாவில் அமைந்து இருக்கும் வவுனியா நகர ஜும்ஆ பள்ளிவாசலின் திறப்பு விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகின்றேன். முன்னால் அமைச்சர் என்பதைவிட இந்த அல்லாஹ்வின் அழகு மாளிகைக்கு ஆரம்பம் தொடங்கி இன்று வரையில் நெருங்கிய தொடர்புள்ளவன் என்ற வகையில் 1925, ஆண்டு எனது பாட்டனாராகிய ஹாஜி கப்பலார் அவர்களின் முயற்சியால் ஓலைப்பள்ளிவாசலாக உருவாகியதைத் தொடர்ந்து இந்த பள்ளிவாசலை பல பரிமானமாற்றங்கள் செய்து 1960ம் ஆண்டு முகப்புடன் கொண்ட பள்ளிவாசலாக மாற்றி அமைத்து செயற்பட்ட எனது பெரிய தகப்பனார் அப்துல்லத்தீப் ஹாஜியார் அவர்கள் இப்பள்ளிவாசலின் பொருளாளராக செயலாற்றி வந்தார்கள் தொடர்ந்து நானும் கடந்த 1993ம் ஆண்டில் இருந்து இப்பள்ளியில் அங்கத்தினராக இருந்து வருகின்றேன் என்று நினைக்கும் போது ஆரம்பம் முதல் இன்று வரையில் வவுனியா நகர ஜும்ஆ பள்ளிவாசலுடன் நெருங்கிய தொடர்பும் உறவும் உள்ள வகையில் இந்த அல்லாஹ்வின் மாளிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்க வாய்ப்பு அளித்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும், அல்ஹம்துலில்லாஹ், என்று கூறியவனாக வட மாகாணத்தின் வவுனியா நகரில் முதற் பள்ளியாகிய வவுனியா ஜும்ஆ நகரப்பள்ளிவாசல் வட மாகாணத்தில் முஸ்லீம் மக்களின் அனைத்து தேவைகளையும் தீர்த்து வைக்க கூடிய பள்ளிவாசலாக செயற்பட்டு வருவதை நான் உணர்கின்றேன். மேலும் அகில உலகத்தில் இஸ்லாமிய சமூகத்திற்கு மாசு கற்பிக்க நினைத்த சக்திக்கு எதிராக வவுனியா நகர ஜும்ஆ பள்ளிவாசல் முஸ்லீம் மக்கள் சார்பாக பாரிய பேரணிகளையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்திய பலம் பொருந்திய பள்ளிவாசல் என்ற வகையில் பெருமிதமடைகின்றேன். நல்ல நேர்மையான நீதியான தலைமைத்துவமும் கட்டுப்பாடான நிர்வாக சபையும் ஒத்துழைப்பு வழங்கும் ஜமாஅத்தினர்களுக்கும் நன்றி கூறியவனாக இப்பள்ளிவாசல் எப்போதும் எந்த காலங்களிலும் அனைத்து சமூகத்துடனும் ஒற்றுமையுடனும் சகோதரத்துவத்துடனும் நடக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

அல்ஹாஜ் நூர்தீன் மசூர்,
ஹாஜி கப்பலார் அன்சன்ஸ்,
&
வவுனியா ஹாட்வெயார்
வவுனியா.

## ஜமியதுல் உலமா சபையின் வவுனியா மாவட்ட தலைவர் அவர்களின்

# வாழ்த்துச்செய்தி

வவுனியா நகர ஜும்ஆ பள்ளிவாசலின் திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். இச்சந்தர்ப்பத்தில் நகர ஜும்ஆ பள்ளிவாசலின் செயற்பாடுகளையும் அதன் பணிகளையும் எடுத்தியம்புவதில் பெருமிதம் அடைகின்றேன்.

அகில உலகத்தில் இஸ்லாமிய சமூகத்திற்கோ அல்லது இஸ்லாத்திற்கோ மாசு கற்பிக்க நினைக்கின்றவர்களுக்கும் உலக முஸ்லீம்களை நசுக்க முனைகின்றவர்களையும் வவுனியா மாவட்ட முஸ்லீம்கள் சார்பாக பாரிய பேரணிகளையும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் ஏற்பாடு செய்து அவற்றை முன்னின்று நடாத்தியது நாடறிந்த விடயமாகும்.

மாவட்டத்தில் சிறிய சனத்தொகையைக் கொண்ட இஸ்லாமிய உம்மத்தை சகோதர மனப்பாங்குடனும் நேச உறவுடனும் அணைத்துச் செயற்படுவதில் முன்னின்று உளைக்கின்றது. கிராமங்களில் ஏற்படும் சமூகம் தொடர்பான பிரச்சினைகளை அவர்களுடன் இணைந்து சமாதானமாக தீர்த்துவைத்ததை அக்கிராமங்கள் அறியும்.

வருடந்தோறும் இஸ்லாமிய பெருவிழாக்களை ஏற்பாடு செய்து வெளியூர், உள்ளூர் உலமா (அறிஞர்கள்)க்களைக் கொண்டு மார்க்க சொற்பொழிவுகளை வழங்கி சமூகத்தை புத்துணர்ச்சி பெறச்செய்தது. அத்துடன் பிறமத நண்பர்கள், சகோதரர்கள், அரச உயர் அதிகாரிகள், மதகுருமார்கள் என்போர்களை அழைத்து கௌரவப்படுத்தியதுடன் சமூக, சமய நல்லிணக்கத்திற்கு வழிவகுத்து செயற்பட்டதையும் அறிய முடிந்தது.

இஸ்லாமிய மார்க்கம் தொடர்பான சட்டபபிரச்சினைகள் ஏற்படும் போது உரிய நேரங்களில் மாவட்ட உலமா சபையை நாடி ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் தீர்வுகளையும் பெற்றதை நினைவு கூறுகின்றேன். வவுனியா மாவட்டத்தில் 21 கிராமங்களிலும் ஏனைய பிற இடங்களிலும் முஸ்லீம்கள் 27 பள்ளிவாசல்களை அமைத்து அதன் சூழல்களில் வாழ்கின்றனர். இவர்களுக்கு பல தேவைகள் உயரிய அபிலாசைகள் உள்ளன. இவற்றை எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு நல்ல பல செயற்றிட்டங்களைத் தீட்டி அவற்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என நகர ஜும்ஆ பள்ளிவாசலின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

இஸ்லாமிய கலாச்சாரத்தை அடையாளப்படுத்தும் ஒரு சின்னமாக நகர பள்ளிவாசல் பல "குப்பா" களையும் உயர்ந்த "மனாறா" களையும் உடைய அமைப்பில் நிர்மாணிக்கப்பட்டு பல நிறங்களில் நிறம் தீட்டப்பட்டு நகர மத்தியில் காட்சியளிப்பது மாவட்ட முஸ்லீம்களின் ஒரு அடையாளச் சின்னமாகும்.

பள்ளிவாசல்கள் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளை திறம்படத் திட்டமிட்டு ஒழுங்கமைத்து பணிபுரிய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*ஜஸாக்குமுல்லாஹு' ஹைறா*

அல்ஹாஜ், மௌலவி,
S.M. அப்துல் மஜீத் J.P
மாவட்ட உலமா சபைத் தலைவர்,
குவாஸி நீதிமன்ற நீதிபதி,
வவுனியா.

# வவுனியா அரசாங்க அதிபர் அவர்களின் வாழ்த்துச்செய்தி

வவுனியா நகரப்பள்ளிவாசலின் திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்படவிருக்கும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வவுனியா நகரப் பள்ளிவாசல் முஸ்லிம் மக்களது வணக்கஸ்தலமாக மட்டுமல்லாது பல சமூக சேவைகளையும் ஆற்றி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வவுனியா மாவட்டத்தில் மூவின மக்களது வாழ்த்துக்களும் இப்பள்ளிவாசலுக்கு கிடைத்துள்ளது. கடந்த காலங்களில் ஏற்பட்ட இடப்பெயர்வின் போது வவுனியா மாவட்டத்திற்கு வந்த மக்களுக்கு இப்பள்ளிவாசல் பல வகைகளிலும் உதவி புரிந்துள்ளது. அத்துடன் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு முல்லைத்தீவு மாவட்ட மக்கள் பல இன்னல்களையும் அனுபவித்த வேளை இப்பள்ளிவாசலைச் சேர்ந்த முஸ்லிம் தொண்டர்கள் பல உதவி ஒத்தாசை புரிந்தமை பாராட்டப்பட வேண்டியது.

சமய சடங்குகள் அனைத்தும் சமய முறைப்படி வேளை தவறாது அனுட்டிக்கப்பட்டு சிறப்பாக நடைபெறும் இப்பள்ளிவாசலுக்கு தற்போது அமைக்கப்பட்ட மேல்மாடிக் கட்டிடம் காலத்தின் தேவையாகும். இப்பள்ளிவாசல் வவுனியா வாழ் முஸ்லிம் மக்களுக்கு மேலும் சிறப்பாக சேவை செய்ய வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

திரு.சி.சண்முகம்
அரசாங்க அதிபர்
வவுனியா.

# மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்து செய்தி

வவுனியா நகரத்தின் மத்தியில் வாழும் அழகும் நிறைந்த ஓர் இறை இல்லமாக காட்சி தரும் எமது நகரத்தின் முஹைதீன் ஜும்ஆ பெரிய பள்ளி வாசல் திறப்பு விழா சிறப்பு மலருக்கு வாழ்த்து செய்தி வழங்க வாய்ப்பு கிடைத்ததையிட்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

வவுனியா மாவட்டத்தில் பல ஆண்டு காலமாக வாழ்ந்து வருகின்ற எமது முஸ்லீம் சகோதரர்கள் தங்களது சன்மார்க்க வழிபாடுகளையும் சமய விழுமியங்களையும் பேணி நடக்கும் உண்ணத வழிபாட்டுத் தளமா இப்பள்ளிவாசல் விழங்குகின்றது. அதுமட்டுமன்றி இம்மாவட்டத்தின் மூவின மக்களின் ஒற்றுமையான சமத்துவமான வாழ்க்கை நடவடிக்கைகளுக்கும் ஓர் சமாதான செயலகமாகவும் செயற்பட்டு வருகின்றது

இப்பள்ளிவாசல் கட்டிட பணியில் ஈடுபட்ட சகலரையும் இச்சந்தர்ப்பத்தில் விசேடமாக பாராட்டுகின்றேன்.

இப்பள்ளிவாசல் அமைக்கப்பட்டிருக்கின்ற அழகைப் பார்க்கும்போது முஸ்லீம்களின் பாரம்பரிய கலையம்சங்களை முழுமையாக பிரதிபலிப்பதுடன் வவுனியா நகருக்கே ஒரு விசேட அழகு சேர்த்துள்ளதென்றால் மிகையாகாது.

ஆகவே இப்பள்ளிவாசல் சகல வழிகளிலும் சிறப்புற்று இயங்கவும் இப்பள்ளிவாசல் திறப்பு விழா நிகழ்வும் மலர் வெளியீடும் சிறப்பாக நடைபெற எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புடன்

P.S.M சாள்ஸ்

மேலதிக அரசாங்க அதிபா்

கச்சேரி வவுனியா.

## வவுனியா பிரதேச செயலாளர் அவர்களின்

# வாழ்த்துச்செய்தி

வவுனியா நகரில் மிகவும் அழகாக அமைக்கப்பட்ட பள்ளிவாசல் திறப்புவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டுவது ஆன்மீகம். எந்த மதத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும் இறைவழிபாடு, ஆன்மீகம், இறைவன் மேல் பயபக்தி, அன்பு என்பது மிகவும் அவசியமானது. இந்து, இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்தவம், எல்லா மதங்களும் நல்ல விடயங்களையே போதிக்கின்றன. எல்லா மதத்திலும் உள்ள ஆன்மீக நல்ல விடயங்களை நாம் கற்றுக்கொண்டு அதன்படி செயற்பட வேண்டும். மற்றைய மதங்களை மதிக்க வேண்டும். மனிதனை நாம் மதிக்க வேண்டும். இன்றைய இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொள்ள இறைவனின் அற்புத சத்தியத்தால் மட்டுமே முடியும். நாம் நல்லவர்களாக, மனிதநேயம் மிக்கவர்களாக, மற்றவர்களுக்குத் தீங்குசெய்யாதவர்களாக, மற்றவர்களுக்கு உதவுபவர்களாக, கண்ணியமுள்ளவர்களாக, வாழ எல்லாம் வல்ல இறைஅருள் எமக்கு கிடைக்க வேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

வவுனியா நகரப் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் சிறந்த முறையில் அழகாக ஆன்மீகத்துடன் இப்பள்ளிவாசலை அமைத்துள்ளார்கள். வவுனியா மாவட்டத்தில் குறிப்பிடத்தக்களவு கம்பீரமாக அமைந்த பள்ளிவாசல் மூலம் மக்களுக்கு சமூகப் பணியையும் மேற்கொள்ள வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

அன்புடன்,

செல்வி த.துரைச்சாமி

பிரதேச செயலாளர்,

வவுனியா.

## நகர சபை செயலாளரின்
# வாழ்த்துச் செய்தி

இலங்கைத்தீவின் வடக்கே பல வளங்களையும் பசுமையான வயல்களையும் நீர் வளங்களையும் இன்னும் பல சிறப்புக்களையும் இனிதே வாய்க்கப் பெற்ற வன்னித்திருநாட்டின் மத்தியில் சீருடனும், சிறப்புடனும் விளங்குவது வவுனியா மாநகரமாகும்.

இம்மண்ணில் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் அவர்களின் பண்பாட்டுச் சின்னங்கள் பலவும் இங்கே அமைந்திருக்கின்றன. அதன் ஒரு பாகமாக இஸ்லாமியரின் பண்பாட்டுச் சின்னமாகிய மசூதி அமைக்கப்பட்டமையானது அவர்களின் மதப்பற்றையும், கலாச்சார விழுமியங்களையும் எமக்கு எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

வவுனியா நகர சபையானது இங்கே வாழும் மூவின மக்களுக்கும் வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்து வருவதுடன் நகரை அபிவிருத்தி செய்வதிலும் பெரும் பங்கு ஆற்றியுள்ளது. ஆற்றி வருகின்றது. அந்த வகையில் நகரசபை செயலாளர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தி கூறுவதையிட்டுப் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

பண்பாடு என்பது ஒரு வாழ்க்கை முறையாகும். சமகால பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் சமூகம் பல்வேறுபட்ட தாக்கங்களையும் எதிர்நோக்குகின்றது. எனினும் ஒவ்வொரு இனமும் தமது கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை வளர்த்தெடுப்பதற்கும், பாதுகாப்பதற்கும், இவ்வாறான கலையம்சம் மிக்க சின்னங்களை அமைப்பதன் மூலம் பேணி வருகின்றன எனலாம்.

கலைஞனும் சமூகத்தில் வாழ்வதால் எத்தனை கற்பனையாக கலைகளைப் படைத்தாலும் தன்னிச்சையாகப் படைத்தாலும் அது சமுதாயத்தை ஒட்டியதாகவே இருப்பதைக் காணலாம். அந்த வகையில் வவுனியா மாநகரின் மத்தியில் ரம்மியமான அழகுடன் எழுந்து நிற்கும் இப்பண்பாட்டுச் சின்னம் வவுனியா நகரின் அழகை மேலும் மெருகூட்டுவதாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது. இது நகர மக்களின் கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை எடுத்தியம்புகின்றது.

நம் உள்ளங்களிலே அஞ்ஞான இருளைப் போக்கி மெய்ஞ்ஞான ஒளியை உதயமாகச் செய்யும் பேரொளிதான் புனித இஸ்லாமாகும். இப்புனித இஸ்லாம் மனித வாழ்வை மாண்படையச் செய்கின்றது. இவ்வகையில் உலக மக்கள் அனைவரும் சிறந்த வாழ்வைப் பெற்று உன்னத நிலையை அடைய வேண்டும் என அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

த.ஜெயராஜ் (S.L.A.S)
செயலாளர்
நகரசபை
வவுனியா.

# பள்ளிவாசல் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

அளவற்ற அருளாளரும் நிகரற்ற அன்புடையோனும் ஈறுலக இரட்சகனும் ஆகிய அல்லாஹ்வின் திருநாமத்தாலும் நபிபெருமானார் முகம்மது (ஸல்) அலைஹிவஸல்லம் அவர்களுக்கு ஸலாம் கூறியவனாகவும் வல்ல அல்லாஹ்வை புகழ்கின்றேன். அல்ஹம்துலில்லாஹ்...

வவுனியா நகரத்தில் அமைந்துள்ள அல்லாஹ்வின் மாளிகைக்கு செயலாளர் என்ற முறையில் வாழ்த்துரை வழங்குவதையிட்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைவதுடன் இவ் அரிய சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு அல்லாஹ்விற்கு நன்றியும் கூறுகின்றேன். இந்தப்பள்ளியை ஸ்தாபிப்பதற்கு 1875ம் ஆண்டுகளில் காணி கிடைக்கப்பெற்று 1925ம் ஆண்டுகளில் இப்பள்ளி ஸ்தாபிக்கப்பட்டு சிறு சிறு பரிமான மாற்றங்களுடன் பழைமை வாய்ந்த பள்ளியாக 1930ம் ஆண்டு வரை ஓலையால் அமைக்கப்பட்டு இருந்தது. அதன்பின் 1960ம் ஆண்டு காலப்பகுதிகளில் சிறிய கட்டிட அமைப்புடன் வடிவமைப்பு மாற்றப்பட்டு இயங்கி வந்தது இப்படியாக செயற்பட்ட காலங்களில் 1993ம் ஆண்டு அப்போது இருந்த நிர்வாக சபை உறுப்பினர்களின் ஆலோசணைக்கு அமைய பொதுச்சபை அங்கிகாரத்துடன் இப்பள்ளி வாசலை விசாலமாக கட்டவேண்டும் என எடுத்த முடிவுக்கு அமைய அப்போது 15 பேர் கொண்ட கட்டிடக்கொமிற்றி அமைக்கப்பட்டது. அதில் நானும் அல்லாஹ்வின் நாட்டத்தால் தெரிவு செய்யப்பட்டேன் அக்கட்டிடக்கொமிற்றியில் செயலாளராக கடமையாற்றி இப்பள்ளி வாசலின் கீழ்த்தளக்கட்டிட வேலைகளை கட்ட ஆரம்பித்தோம். அவ்வேலைகள் 90வீதம் முடிவடையும் தருவாயில் 1997ம் ஆண்டு காலப்பகுதியில் எமது கட்டிடக்கொமிற்றியை கலைத்து புதிய நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டு அதில் நான் மீண்டும் நிர்வாகத்தின் செயலாளர் பதவிவகித்து இந்தஅல்லாஹ்வின் மாளிகை வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வந்தது. அந்தவகையில் 2000ம் ஆண்டு கீழ் வேலைகள் பூர்த்தியானது. அதன் பிறகு 2003ம் ஆண்டு புதிய நிர்வாக சபைத்தெரிவு நடைபெற்றது. அந்தச் சபையில் அல்லாஹ்வின் நாட்டத்தால் மீண்டும் நான் செயலாளராக கடமையாற்றிய போது இப்பள்ளியின் மேல்மாடிக்கட்டிட வேலை ஆரம்பம் செய்தோம். எமது இந்த பாரிய முயற்சியை அல்லாஹ் பொருந்திக்கொண்டதால் 2008ம் ஆண்டில் இப்பள்ளிவாசலை கட்டிப்பூரணப்படுத்தியுள்ளோம். இந்த அல்லாஹ்வின் மாளிகையின் தனிச்சிறப்பானது மூன்று வீதிகள் மையமாக அமைந்த இடத்தில் நிருவியதன் காரணமாக மூன்று வீதியின் எத்திசையில் நின்று பார்த்தாலும் அதன் அழகு சிகரத்தை பார்த்து ரசிக்கக் கூடியதாக அமைந்திருப்பது ஓர் சிறப்பம்சமாகும். அதற்கும் அந்தஅல்லாஹ்விற்கே அனைத்துப் புகழும். இந்தப்பள்ளியானது எந்தஒரு விசேட நிபுணத்துவம் கொண்ட கட்டிடநிபுணர்களைக்கொண்டு வடிவமைக்கப்படவில்லை எமது நிர்வாகத்தினரின் சக்தி, ஆற்றலுக்கு ஏற்பவும் அல்லாஹ்வின் விசேட அருள் கிருபையாலும் எமது பள்ளி வாசலின் பொருளாளர் அல்ஹாஜ் ஏச்.எம்.சலீம் அவர்களின் விசேட சிந்தனையின் அடிப்படையிலும் எங்களோடு தோலோடு தோல் நின்று எல்லாவகையிலும் பல ஆலோசனைகளையும் உதவிகளையும்

வழங்கிய தலைவர் அல்ஹாஜ் பி.எஸ்.அப்துல்லா அவர்களுக்கும் இப்பள்ளிவாலில் நிர்மாணம் தொடர்பாக எல்லா வகைகளிலும் உதவி நிர்வாக உறுப்பினர்களுக்கும் நன்றி கூறியவனாக இந்தப்பள்ளி வாசல் நல்ல முறையில் கட்டி முடிக்க வேண்டுமென்று பிரார்த்தனைகள் மூலமாகவும் பணத்தால் பொருளால் உடலால் உதவி செய்த வியாபாரிகள் கடை ஊழியர்கள் மற்றும் முஸ்லீம்கள் அனைவருக்கும் அல்லாஹ் சொர்க்கத்தில் ஒரு மாளிகையை கட்டித் தருவானாக என துஆ கேட்டவனாக இந்த அல்லாஹ்வின் மாளிகையின் திறப்பு விழாவும் சிறப்பு மலர் வெளியீட்டு நிகழ்வும் விமர்சையாக நடந்தேற எல்லாம் வல்ல அல்லாஹ்வை வாழ்த்தியவனாக பிரார்த்தித்து விடைபெறுவதுடன் இவ் அரிய சந்தர்ப்பத்திற்கு எனது பெரும் மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் வெளிப்படுத்துகிறேன்.

இப்படிக்கு

அல்ஹாஜ்.சி.எம்.அஸீஸ் J.P

செயலாளர்,

வவுனியா நகர முஹைதீன் ஜும்ஆ பெரிய

பள்ளிவாசல்

# பள்ளிவாசல் பொருளாளரின்
# வாழ்த்துச்செய்தி

வடமாகாணத்தின் நுழைவாயிலாக அமைந்துள்ள வவுனியா மாவட்டத்தின் அனைத்துப் பள்ளிவாசல்களின் தலைமையகமாக செயலாற்றி வரும் வவுனியா நகர ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் கடந்த 14 வருடங்களுக்கு முன் 1993ல் புதிய கட்டிட நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இறைவனின் பேரருளால் இன்று புதிய பரினாமத்துடன் ஓர் அழகிய இறையில்லமாக நிமிர்ந்து நிற்கின்றது. இது எமது சமூகத்திற்குக் கிடைத்த மாபெரும் அருட்கொடையாகும்.

இதன் ஆரம்பக்கட்ட வேலைத்திட்டத்தை முன்னெடுக்க போதிய அளவு நிதி இல்லாத போதும், இதற்காக தெரிவு செய்யப்பட்ட கட்டிடக் குழுவும் நிர்வாக சபை உறுப்பினர்களும் ஆற்றிய கடுமையான பங்களிப்பின் மூலமாக எமது ஜமாஅத்தார்கள் வழங்கிய நிதி உதவியைக் கொண்டு தளப்பகுதி கட்டி முடிக்கப்பட்டது. அதற்காக உழைத்த அனைவரிற்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

இது வரை நடந்து முடிந்த வேலைகளின் தோற்றத்திற்கும் எடுக்கப்படும் ஆலோனைகளுக்கும் எதுவித இடையூறும் இன்றி விட்டுக்கொடுப்புடன் செயற்பட்ட எமது நிர்வாகத்தினர்களுக்கும் குறிப்பாக நான் இந்தப்பள்ளி வேலைகளின் போது விசேட வடிவமைப்புத் தொடர்பாக செயலாளர் C.Mஅஸீஸ் அவர்களையும் அணுகி கட்டிடங்களின் வடிவம்சங்கள் பற்றிய விடயங்களை முன்வைத்த போதெல்லாம் எமது தலைவர் உட்பட நிர்வாக உறுப்பினர்கள் தந்த ஒத்துழைப்பின் மறுவடிவமே இப்பள்ளிவாசலின் இவ் அழகிய தோற்றத்திற்கு காரணமாக அமைந்தது. அந்த வகையில் மீண்டும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் இவ்விறையில்லத்தை நல் அமல்களையும் அத்துடன் இஸ்லாத்திற்கும் இஸ்லாமிய சமூகத்திற்கும் அரும் பணியாற்றும் கேந்திரத்தலமாக அமைந்து செயலாற்ற வேண்டும் என இறைவனை பிரார்த்தித்து விடைபெறுகின்றேன்.


அல்ஹாஜ் எச்.எம்.சலீம் J.P (Civil Eng)

பொருளாளர்

வவுனியா நகர முஹைதீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல்

வவுனியா.

# உபதலைவர் சக நிர்வாக சபை உறுப்பினர்களின் உள்ளத்தில் ஊற்றெடுத்தவை

அல்லாஹ்வின் பேரருளால் இன்று வவுனியா நகரப்பள்ளிவாசலின் திறப்புவிழாவையிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் இவ்வழகிய பள்ளியின் சக நிர்வாக உறுப்பினர்களாகிய நாங்கள் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றோம்.

வவுனியா நகரப்பள்ளிவாசலானது வட மாகாணத்தின் நுழைவாயிலான வவுனியா நகரத்தின் மையப்பகுதியில் அழகுற அமையப்பெற்றதற்கு முதற்கண் நாம் வல்ல அல்லாஹ்வுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். இவ் அல்லாஹ்வின் மாளிகையை பராமரிக்கின்ற பாரிய பொறுப்பை சுமக்கக்கூடிய ஓர் சந்தர்ப்பத்தை அல்லாஹ்வின் நாட்டத்தால் ஜமாஅத்தார்களின் சார்பில் நாம் தெரிவு செய்யப்பட்டதையிட்டும் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

அத்துடன் இப்பள்ளிவாசலை நாம் நிருவாகிக்கும் காலத்திலே மேல் மாடிக்கட்டிடம் என்ற அமைப்பில் ஒரு முழுமையான அழகிய தோற்றத்தில் இப்பள்ளிவாசலை கட்டி முடிக்க எங்களாலான பணிகளை செய்ய சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டும் நன்றியுடனான ஆனந்தமடைகின்றோம். இப்பள்ளியை பராமரித்த காலப்பகுதியில் பள்ளிவாசலுக்குச் சொந்தமான அசையும், அசையா சொத்துக்களை பேணிப்பாதுகாப்பதிலும் பள்ளியின் வரவு செலவு விடயங்களில் முற்றுமுழுதாக நேர்மையுடன் நடக்கின்ற செயற்பாட்டிலும் பொறுப்புடன் நடந்ததை நினைவு கூறுவது பொறுத்தமாகும்.

அது மட்டுமல்ல நகரப்பள்ளி வாசலில் நடைபெறுகின்ற மார்க்கம் சம்பந்தமான அனைத்து விடயங்களிலும் மார்க்கத்தின் விசேட நிகழ்வுகளிலும் முஸ்லிம் சமூகத்தின் அடக்குமுறை பிரச்சினைகளை கலைந்தெரியவும் நிதானமானதும் தெளிவானதுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளோம். அந்த சேவையின் ஓர் அங்கமாக தமது பள்ளிவாசலின் ஒளியை தடையின்றி பிரகாசிக்கச் செய்யும் நோக்கின் ஓர் பாரிய ஜனரேட்டரை தற்போது பெற்றுள்ளோம். எனவே எந்த நம்பிக்கையில் ஜமாஅத்தார்கள் எங்களை இந்தப் பள்ளியின் நிர்வாகத்திற்கு தெரிவு செய்தார்களோ அந்தக் கடமைகளை அல்லாஹ்வின் உதவியால் எமது சக்திக்கேற்ப ஓரளவு நிறைவேற்றியுள்ளோம் என்பதையும் அறியத்தருகின்றோம்.

இந்த மாவட்டத்தில் வாழுகின்ற முஸ்லிம், இந்து, கிறிஸ்தவ, பௌத்த சமூகங்களைச் சேர்ந்த மக்களாகிய நாங்கள் முரன்பாடற்ற சமூக ஒற்றுமையுடனான சமத்துவமான ஒரு வாழ்வுமுறையை கடைப்பிடித்து வாழ்வதற்குரிய சகல நடவடிக்கைகளுக்கும் நிர்வாகத்தினராகிய நாம் எமது பூரண பங்களிப்பை செய்து வந்துள்ளோம். அப்படியான பொது விடயங்களில் நாம் ஈடுபடுகின்ற பொழுது தேவையான ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்ற ஜமாத்தினருக்கும் வவுனியா நகரப்பள்ளி வாசலின் கட்டிடம், இவ்வளவு அழகாக அமைவதற்கு தங்களுடைய விஷேட வடிவமைப்புச் சிந்தனைகளையும், கருத்துக்களையும் தெரிவித்து செயற்பட்ட எமது நிர்வாகத்தின் உறுப்பினர்களான அல்ஹாஜ் H.M. சலீம், அல்ஹாஜ் C.M. அஸீஸ் அவர்களுடன் சிறப்பு வழிகாட்டல்கள் வழங்கிய தலைவர் அல்ஹாஜ் P.S.அப்துல்லா J.P ஆகிய மூவர்க்கும் இச்சந்தர்ப்பத்தில் விஷேடமாக நன்றி கூறுவது கடமையாகும்.

அந்த வகையில் இன்ஷாஅல்லாஹ் இந்த மாபெரும் இறை இல்லத்தை சகல வழிகளிலும் கட்டுக்கோப்புடன் வக்பு சபையின் சட்ட திட்டங்களையும், பள்ளிவாசலின் யாப்பின் அடிப்படையிலும் ஜமாத்தினர்களின் நல்ல சிந்தனைகளின் அடிப்படையிலும் ஷரியத் சட்டதிட்டங்களை மதித்தும் இந்த பள்ளிவாசலின் அனைத்து சொத்துக்களையும் இறை விசுவாசத்துடன் நேர்மையான முறையில் பாதுகாத்து நிர்வகிக்கக் கூடிய நிர்வாகிகள் தெரிவாக எல்லாம் வல்ல அல்லாஹ் அவனது நாட்டத்தின் அருள் மழையைப் பொழிய வேண்டுமென பிரார்த்திப்பதுடன். எம் அனைவரினதும் செயற்பாடுகளையும் இஹ்லாஸானதாக அல்லாஹ் ஆக்கி அருள்வானாக ஆமீன்

இவ்வண்ணம்,

உப தலைவர், நிர்வாக சபை உறுப்பினர்கள்,

முஹைதீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல்,

வவுனியா நகரம்.

## வவுனியா நகர முஹைறதீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல்
## கௌரவ நிர்வாக சபை உறுப்பினர்கள்



அல்ஹாஜ்
S.K.மஸ்தான் J.P
உபதலைவர்



அல்ஹாஜ்
C.M.அஸீஸ் J.P
செயலாளர்



அல்ஹாஜ்
H.M.சலீம் J.P
பொருளாளர்



அல்ஹாஜ்
A.L.ஹபீபுல்லா
உபதலைவர்



அல்ஹாஜ்
P.S.அப்துல்லா J.P
தலைவர்



அல்ஹாஜ்
M.K.ஆரிப் J.P
நிர்வாக உறுப்பினர்



அல்ஹாஜ்
M.J.M.பாஹீம்
நிர்வாக உறுப்பினர்



அல்ஹாஜ்
A.H.M.அஸ்ஹர்
நிர்வாக உறுப்பினர்



அல்ஹாஜ்
M.A.C.M.அமீன்
நிர்வாக உறுப்பினர்



மர்ஹூம் அல்ஹாஜ்
A.C.M சஹாப்தீன்.J.P
முன்னாள் உபதலைவர்



அல்ஹாஜ்
M.C.உவைஸ்
நிர்வாக உறுப்பினர்



ஜனாப்
A.M.சக்கரியா
நிர்வாக உறுப்பினர்

அல்ஹாஜ்
K.S.M அலி
நிர்வாக உறுப்பினர்



அல்ஹாஜ்
M.T.நஸார்
நிர்வாக உறுப்பினர்

வவுனியா இஸ்லாமிய கலா..சார அபிவிருத்திச் சபை

# செயலாளரின் வாழ்த்துச் செய்தி

பலநூறு ஆண்டுகளுக்கு முன் வன்னியின் விவசாயவளம், கொளித்த விளாங்குளம் எனும் கிராமம் தன் வரலாற்றை மேன்மைப்படுத்தி வவுனியா நகரமென அழைக்கப்படலாயிற்று.

வவுனியா நகரத்தின் முக்கிய மூன்று வீதிகள் சந்திக்கும் முச்சந்தியில் கம்பீரமாக காட்சியளிக்கிறது. வவுனியா நகர பெரிய ஜும்ஆ பள்ளிவாசல். காண்போர் கண்களைப் பறிக்கும் கவர்ச்சியான தோற்றம். ஏங்கித் தவிக்கும் உள்ளங்களை அமைதி கொள்ளச் செய்யும் அல்லாஹ்வின் மாளிகை. உள்ளே சென்று அழகிய ஒழுவை செய்த பின் உட்காராமல் இரண்டு ரக்காஅத் தொழுதுகொள்ள இன்பம் அளிக்கிறது. ஆம் அது வரண்ட பூமியில் ஒரு வளமான மழை பொழிந்தது போல் ஆத்ம திருப்தியளிக்கிறது. படைப்புகளிடம் எதையும் கேட்காமல் சகலவற்றையும் இருகரமேந்தி கேட்கும் பாக்கியத்தை வழங்குகிறது. நல்லமல்களைக் கொண்டு அல்லாஹ்வின் மாளிகையை அழகுபடுத்துவோம்.

நகரத்தில் ஒரு சிறு பள்ளிவாசலாக இருந்தது. இன்றுமாடி கட்டிமிளிர்வதற்கு அல்லாஹ்வின் அருளால் தலைவரும் நம்பிக்கையாளர் சபையும் நகர ஜமாஅத்தார்களும் மற்றும் உள்ளூர் கொடை வள்ளல்களும் வழங்கிய ஒத்துழைப்பு, உதவிகள் பெறுமதிமிக்கதாகும். மேலும் பள்ளியின் நம்பிக்கையாளர்களாகவும் ஜமாஅத்தார்களாகவும் சேவை புரிந்து மண்ணறைக்குச் சென்றுவிட்ட முன்னோர்களையும் மறவாமல் துஆகேட்போம். இதற்காக உழைத்த உலமாக்களையும் நினைவு கூறுவோம்.

இ'.லாஸ் எனும் தூய எண்ணத்துடன் அல்லாஹ்வின் பொருத்தத்தை மட்டும் நாடி இப்பள்ளிவாசல் கட்டிட வேலையிலும் மற்றும் நல்ல பல சேவைகளிலும் உழைத்த சகலருக்கும் மலர்க்குழுவினருக்கும் வல்ல அல்லாஹ்விடம் சுவனத்தை வேண்டிப்பிரார்த்திக்கின்றோம்.

இ∴து

அல்ஹாஜ் S.H.M.காசிம் J.P

செயலாளர்,

இஸ்லாமிய கலா சார அபிவிருத்திச் சபை,

வவுனியா.

# பள்ளிவாசல் பேஷ் இமாம் அவர்களின் வாழ்த்துச்செய்தி

அஸ்ஸலாமு அலைக்கும்

வடமாகாணத்தின் முக்கிய நகரமான வவுனியா நகரத்தின் மத்தியில் எழில்மிகு தோற்றத்துடன் காட்சியளிக்கும் அல்லாஹ்வின் மாளிகையின் திறப்புவிழா சிறப்பு மலரில் வாழ்த்துச்செய்தி எழுதுவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு பேரின்பம் கொள்கின்றேன்.

மேலும் இப்பள்ளியானது இம்மாவட்டத்தின் சகலபள்ளிவாசல்களினதும் ஒரு முன்மாதிரியாக திகழ்வதோடு இப்பள்ளிவாசலின் மேல்மாடிக்கட்டிடத்திற்கான நிதியுதவி மஹல்லாவாசிகளின் உதவியோடும் பள்ளி பரிபாலனசபை உறுப்பினர்களுடைய முயற்சியோடும் அமைக்கப்பட்டது என்பது மறக்க முடியாத உண்மையாகும்.

மற்றும் அல்லாஹ்வின் பேருதவியால் மறுமை நாள்வரைக்கும் இப்பள்ளிவாசல் நல்அமல்களைக் கொண்டு பிரகாசிக்க வேண்டும் என்று கூறி எனது வாழ்த்துச்செய்தியை நிறைவு செய்கின்றேன்.
*வஸ்ஸலாம்*

இப்படிக்கு

மௌலவி.A.H.றிப்ஹான் (நுழாரி)

பேஷ் இமாம்,

வவுனியா நகர ஜும்ஆ பெரிய பள்ளிவாசல்,

வவுனியா.

# சைவ சமய குருக்களின் வாழ்த்துச்செய்தி

வவுனியா நகரில் இப்பள்ளிவாசல் ஆரம்பகாலம் முதல் எனக்கு நன்கு தெரியும். இப் பள்ளிவாசல் வவுனியா நகரில் படிப்படியாக முன்னேற்றம் அடைந்து முஸ்லீம் சமய ரீதியில் கலாச்சார அம்சங்களுடன் கூடிய விதிமுறைகளுக்கமைய கைதேர்ந்த கட்டிட வல்லுனர்களின் சிறப்பான கலையம்சத்துடன் இப்பள்ளிவாசலை அமைத்தமைக்கும் இப்பள்ளிவாசல் நிர்வாக சபையினர்கள் சிறப்பாய் செயற்பட்டமைக்கும் அனைவரையும் நான் பாராட்டுகின்றேன். இப்பள்ளிவாசல் தலைவர் P.S. அப்துல்லா, M.K. ஆரிப் என்னுடன் நீண்ட நாட்கள் தொடர்புடையவர்கள். மேலும் இவர்கள் முஸ்லீம் கலாச்சார மண்டப திறப்பு விழா மீலாத்விழா போன்றவற்றில் என்னையும் அழைத்தது என் வாழ்நாளில் மறக்க முடியாது. வவுனியா நகரில் சாந்தி சமாதானம், இன ஒற்றுமை ஏற்படும் வகையில் இப்பெரிய பள்ளிவாசல் செயற்பட்டு வருவது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

அவ்வகையில் இப்பள்ளிவாசல் வவுனியா வாழ் மக்களுக்கும் குறிப்பாக முஸ்லிம் மக்களுக்கும் நல்வழி காட்டும் என்ற மன நிறைவுடன் வாழ்த்துச் செய்தி தங்கள் மலரில் வருவதில் அளவிலா மகிழ்ச்சியுடன் இச்சந்தர்ப்பத்தை தந்த சபையினருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இச்சிறப்பு மலரும் விழாவும் மகிழ்வுடன் நடைபெற வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

*நன்றி*

சிவஸ்ரீ மு.க.கந்தசாமி குருக்கள்,
பிரதம குரு
கலாநிதி, அகில இலங்கை சமாதான நீதவான்.

# கிறிஸ்தவ போதகரின் வாழ்த்துச்செய்தி

வவுனியா நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள பள்ளிவாசல் கட்டிடத்தின் திறப்பு விழாவையொட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இறைவன் எம் எல்லோரையும் படைத்து, தம்மை அறிந்து, அன்பு செய்யும்படி அழைப்பு விடுத்துள்ளார். நாம் கடவுளை அறிவதற்கும் அவரோடு நாம் ஒன்று சேர்வதற்கும் இந்த பள்ளிவாசல் கட்டிடமானது ஓர் உந்து சக்தியாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

மனித ஆன்மீகம் வளர்ச்சியடைய இது ஒரு சக்தி வாய்ந்த இடமாகவும், அனைவரையும் அரவணைக்கும் இல்லமாகவும் இது விளங்க வாழ்த்துத் தெரிவித்து நிற்கின்றேன்.

அன்புடன்,

அருட் திரு. அந்தோணி செபமாலை

சென். அந்தனிஸ் தேவாலயம்,

இறம்பைக்குளம்,

வவுனியா

# சங்கைக்குரிய பௌத்த குருக்கள் அவர்களின் வாழ்த்துச் செய்தி

வவுனியா நகரத்தின் மத்தியில் தற்போது பாரிய எழில்மிகு தோற்றத்துடன் கட்டிமுடிக்கப்பட்டு காட்சிதரும் பெரிய பள்ளிவாசல் திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் இச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பள்ளிவாசல் ஆனது மிக நீண்ட காலங்களுக்கு முன் நகரத்தில் வாழ்ந்த முஸ்லீம் வர்த்தக முக்கியஸ்தர்களால் உருவாக்கப்பட்டதை நான் அறிவேன். இம்முயற்சியின் சமகாலப்பரிமானமே இப்பள்ளியின் இன்றைய அழகிய தோற்றமாகும். இப்பள்ளி வாசலின் நிர்வாகத்தில் மிக நீண்டகாலமாக இன்றுவரை தலைவராக இருந்து மிக நேர்மையாக சேவை செய்து வரும் அல்ஹாஜ் P.S அப்துல்லா தலைவரை விசேடமாக நன்றியுடன் வாழ்த்துகிறேன். அத்துடன் இப்பள்ளி வாசலின் பராமரிப்பிலும் இப்பாரிய பணியில் ஈடுபட்ட நிர்வாகத்தினரையும் மனமாரப் பாராட்டுகிறேன்.

வவுனியா மாவட்டத்திலே வாழுகின்ற சகல இனமக்களின் ஒற்றுமையான வாழ்க்கை நடைமுறைக்கு ஏற்ப சகல சந்தர்ப்பங்களிலும் இந்தப்பள்ளி வாசல் ஒரு சாமாதான ஸ்தலமாகவும் இஸ்லாம் போதிக்கின்ற சாந்தி, சமாதானம், பொறுமை, விட்டுக்கொடுப்பு போன்ற நற்பண்புகளை எடுத்தியம்புகின்ற ஒரு விசேட கல்விக்கூடமாகவும் வணக்கஸ்தலமாகவும் செயற்பட்டு வருகின்றது. இந்நற்பணி இப்பள்ளி வாசலின் ஊடாக இந்த மாவட்டத்தில் தொடர்ந்தும் நடைபெற வாழ்த்துகிறேன்.

இந்தப்பள்ளி வாசலில் இடம்பெறுகின்ற எல்லாவித சமய, சமூக, பொதுநோக்கு நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் என்னை அழைத்து கௌரவிப்பதை நினைவுகூற கடமைப்பட்டுள்ளேன். எனவே நம் அனைவரையும் ஒற்றுமையாக மனித நேயத்துடன் இரக்கமுள்ளவர்களாக வாழ்வதற்கு இப்பள்ளி வாசல் ஓர் உந்து சக்தியாக அமைய வேண்டும் என பிரார்த்தித்து விடைபெறுகிறேன்.

*நன்றி*

இப்படிக்கு

ஸ்ரீ போதிதக்சினாராமாதிபதி

சமாதான நீதவான் (அகில இலங்கை)

வடக்கு கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர்

சியம்பலாகஸ்வெவ விமலசாரநாயக்கதேரோ.

கண்டி வீதி, வவுனியா.

# பள்ளிவாசல் உதவிப் பேஷ் இமாம் அவர்களின் வாழ்த்துச்செய்தி

*அஸ்ஸலாமு அலைக்கும்*

மானிடத்தின் நல் மானிடங்களை வெளிப்படுத்த நன்மறைகள் வழி வகுக்கின்றன. அந்த வகையில் இஸ்லாமியரின் இம்மை, மறுமை தத்துவங்களையும், இஸ்லாமிய பண்பாட்டுத் தத்துவங்களையும் இஸ்லாமியரின் மறைந்த தத்துவங்களையும் வழியமைத்து கொண்டுவருவதிலும் வளர்த்துக்கொள்வதிலும் இஸ்லாமியரின் வாழ்க்கைச் சரித்திரத்தில் மேலோங்கி நிற்பது அல்லாஹ்வின் மஸ்ஜித்களாகும். (பள்ளிவாசல்களாகும்) அந்த வகையில் வவுனியா நகரில் அமைந்திருக்கும் பள்ளிவாசல் வவுனியா வாழ் இஸ்லாமிய பெருமக்களின் மத்தியில் தமக்கென ஓர் தனித்துவத்தைப் பெற்றுத் திகழ்கின்றது. அத்தோடு இத்தகைய மஸ்ஜிதின் வளர்ச்சிக்கு ஆணிவேராக இருப்பது அம்மஸ்ஜிதுகளை வழி நடத்தும் நிர்வாகமாகும்.

1989ம் ஆண்டில் இருந்து நிர்வாகத்தின் கீழ் கடமைபுரியும் ஒருவராக நான் இருந்து வருவதால் என்னால் இன் நிர்வாகத்தின் சேவையும், அர்ப்பணிப்பையும் சிறப்புக்களையும் உணரமுடிகிறது. நிர்வாகத்தினரின் ஒவ்வொருவரின் சிந்தனையும், வியர்வையுமே இம்மஸ்ஜித் வளர்வதற்கான கற்தூண்களாக அமைந்திருக்கின்றன.

வவுனியா மாநகரில் வீறு நடை போட்டுக்கொண்டிருக்கும் இம் மஸ்ஜித் நிர்வாகத்தினரால் வெளியிடப்படும் இன்நூல் வெளிவருவதிலும் மட்டில்லா மகிழ்ச்சி அடைவதோடு இதில் வெளிவரும் ஆக்கங்கள் பல்துறையினருக்கு பல்வேறு வகையிலும் துணைபுரிவதாகவும், சிந்தனை ஆக்கங்களை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. இப்பள்ளிவாசலை மையமாகக் கொண்டு ஒட்டு மொத்த சமூகமும் வளர்ச்சியடைய துணைபுரிய வேண்டும். என்பது எனது பேரவாவாகும்.

அந்த வகையில் இம்மலருக்கு எனது நல்லாசிகளை தெரிவிக்கின்றேன்.

அல்ஹம்துல்லில்லாஹ்

இப்படிக்கு

அல்ஹாஜ் அப்துல் ஹமீது சித்திக் (நத்வி)

உதவிப்பேஷ் இமாம்

வவுனியா நகரப் பள்ளி வாசல்

வவுனியா.

## *வவுனியா வளாக மாணவர்மனம் திறந்து...*

இன்றைய சூழ்நிலைகளின் மத்தியில் வவுனியா நகரில் ஓர் ஒளிக்கீற்றாய் திகழும் வவுனியா நகர ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் சிறப்புமலர் வெளியீட்டில் எமது சார்பிலும் அதன் பெருமைகளை பற்றியும் ஆக்கம் ஒன்றை எழுதுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக 1997ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஒரு தசாப்த காலத்தையே கடந்து விட்ட இவ்வளாகத்தில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம் பட்டதாரி மாணவர்கள் தமது கல்வியைமேற்கொண்டிருக்கின்றனர். 1997ம் ஆண்டு முதல் வவுனியா வளாகத்துக்கு அதிக எண்ணிக்கையான முஸ்லிம் மாணவர்கள் ஆரம்பத்தில் இங்கு வந்து கொண்டிருக்கிறார்கள். மாணவர்கள் ஆரம்பத்தில் இங்கு வரும்போது தமது தங்குமிடங்கள், இறை அனுஷ்டானங்கள் இவற்றை எங்கே செய்து கொள்வது என்ற பதட்டத்துடனே வருகை தந்தனர். ஆனாலும் அவர்கள் இங்கு வரும்வேளை இந்த பள்ளிவாசலை கண்டுதான் மனம் மகிழ்கிறார்கள், இது மாணவர்களுக்கு மட்டுமல்ல ஆரம்பத்தில் அவர்களை அழைத்து வரும் பெற்றோருக்கு கூட ஓர் ஆறுதலாய் அமைகின்றது. அது மட்டுமன்றி இப்பள்ளிவாசல் மாணவர்களுக்கு சில நாட்கள் தங்குமிடமாய்கூட அமைந்துள்ளது.

வவுனியா நகரில் ஓர் பிரகாசமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும் இப்பள்ளிவாசல் மாணவர்களின் கலாச்சார நடவடிக்கைகளை பிற மதங்களை சாராமல் அன்றும் இன்றும் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஏனெனில் எமது வவுனியா வளாகத்தில் மூவின் மாணவர்களும் சேர்ந்தே கல்வி கற்கின்றனர். இந்நிலையில் முஸ்லிம் மாணவர்கள் தமது ஈமானை புனிதமாய் பேன இப்பள்ளிவாசலின் அமைவுகூட காரணம் எனலாம். ஏனெனில் இது ஒவ்வொரு முஸ்லிம் மாணவருக்கும் நாம் முஸ்லிம்களாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் தோற்றம் கொண்டதாய்த்தான் எமக்கு தோன்றுகிறது.

அல்லாஹ் சுபஹானஹுதஆலா அல்குர்ஆனில் கூறுகிறான் "கல்வியை தேடிக்கற்றுக்கொள்ளுங்கள்" என்று அதற்கமைவாக அதிகமான வெளி மாவட்ட முஸ்லிம் மாணவர்கள் இங்கு வரும்வேளையில் அல்லாஹ்வின் வீடான இப்பளிவாசல் அவர்களுக்கு துணை நிற்கிறது என்பதில் ஐயமில்லை. உண்மையில் கூறப்போனால் இது எங்களுக்கு அல்லாஹ்வின் அருட்கொடையாகும். வவுனியா பிரதேச மக்களுக்கு மட்டுமன்று, வெளி மாவட்ட மக்களுக்கு அதிக


உதவி புரியும் இப்பள்ளிவாசலுக்கு எம் மனதினில் எப்போதும் தனி இடம் உண்டு. அத்தோடு ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லீமை ஆதரிப்பது கடமையாகும். எம்மைப் பொருந்த வரை இன்று இப்பள்ளிவாசல் மூலமும், இன்னும் வவுனியா முஸ்லிம் சகோதரர்களாலும் மிகவும் சிறப்பாக நிறைவேற்றப்படுகிறது.

மேற்கூறியவை ஆக்கம் என்பதை விட எம் மனதிற்குள் இருந்த உண்மைகளே, எனவே அன்று முதல் இன்று வரை எம்மை ஆதரித்த இந்தப்பள்ளிவாசல் மேலும் வளர்ச்சி பெற நாம் இறைவனிடம் வேண்டுகின்றோம், அத்தோடு இதன் நிருவாகத்துக்கும் ,வவுனியா முஸ்லிம் சகோதரர்களுக்கும் எமது வவுனியா வளாக முஸ்லிம் மஜ்லிஸ் சார்பில் மனம் திறந்து நன்றி கூறுகின்றோம்.

மாணவர்கள்,
முஸ்லிம் மஜ்லிஸ்,
யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகம்,
வவுனியா.



**1925 ஆண்டு பள்ளிவாசலின் ஆரம்பத் தோற்றம்**



**1960 ஆண்டு பள்ளிவாசலின் முன்னைய தோற்றம்**

## தொகையரா

**இறையோனின் அருட்கொடையாம்**
**எங்கள் முகைதீன் ஜும்ஆ பள்ளிவாசல்**
**வடபகுதி வவுனியாவில்**
**உயர்ந்து நிற்கும் பள்ளிவாசல்**
**கண்கொள்ளாக் காட்சியாக**
**கவர்ந்து நிற்கும் பள்ளிவாசல்**
**என்னவென்று புகழ்பாட**
**எங்கள் இறையின் மாளிகையை.**

### பாடல்

வவுனியா மாநகரில்
வடிவமைத்த பள்ளிவாசல்
தலைவர் பீ.எஸ். அப்துல்லாவின்
தலைமையிலே
ரஸ்டியின் பிரமுகர்கள்
ஒன்றிணைந்து கட்டினார்கள்.
**(வவுனியா)**

பொதுமக்கள் நன் கொடையில்
மலர்ந்து நிற்கும் பள்ளிவாசல்
பொன்மணிக் கலசமாக
உயர்ந்து நிற்கும் பள்ளிவாசல்
பொறுப்புடன் சேவை செய்த
அத்தனை பேர்களுக்கும்
பொறுமையாம் எங்கள்
இறையோனின் அருள் கிடைக்கும்.
**(வவுனியா)**

பெரியோர்கள் உலமாக்கள்
புகழ்ந்துரைத்த பள்ளிவாசல்
இறையோனின் வீடாம் இது எங்கள்
